# தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண் 6411/அ1/2022 நாள் 13.10.2022

பொருள் பள்ளிக்கல்வி - கருணை அடிப்படையில் நியமனம் - 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டிற்குரிய காலிப்பணியிட மதிப்பீடு - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நிரப்புதல் - ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை 1 அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1) துறை நாள் 23.01.2020.

2 அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வி துறை நாள் 09.09.2022

3 தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 39671 /ஜே/இ4/2021, நாள். 10.10.2022.

====

பார்வையில் காணும் அரசாணைகள், ஆணையரகத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் பணிநாடுநர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வட்டாச்சியரின் சான்றுகளின் அடிப்படையில் பணிக்காலத்தில் காலமான கீழ்க்குறிப்பிட்டுள்ள அரசு ஊழியரின் வாரிசுதாரருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பணிநாடுநர் பெயர் மற்றும் முகவரி<br>திரு / திருமதி/ செல்வி | இறந்த அரசு ஊழியரின் பெயர், பதவி / பணிபுரிந்த அலுவலகம் / பள்ளி<br>திரு / திருமதி | இறந்த தேதி | நியமன ஆணை வழங்கப்படும் அலுவலகம் / பள்ளி |
|---|---|---|---|
| **கே. வரலட்சுமி**<br>ஒதூர் மெயின்ரோடு,<br>மைதீன் நகர்,<br>பாலக்கோடு வட்டம், & அஞ்சல்,<br>தருமபுரி மாவட்டம். | என். சிவராமன்,<br>இரவு காவலர்<br>அமேநிபள்ளி, திருமல்வாடி,<br>பாலக்கோடு வட்டம்,<br>தருமபுரி மாவட்டம். 636 808. | 31.10.2015 | அரசு<br>மேல்நிலைப்பள்ளி<br>திருமல்வாடி<br>(கோட்டூர்) தருமபுரி<br>மாவட்டம் |

- நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப்பெற்ற உடன் பணியில் சேர வேண்டும்.
- மேற்கண்டவாறு பணிநியமன ஆணை வழங்கப்பட்டவருக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017ன் கீழ், அரசாணை (நிலை)எண். 303/ நிதி (ஊதியக்குழு)த் துறை நாள் 11.10.2017ன் படி. நிலை-8 19500-62000 என்ற ஊதிய தொகுப்பில் அடிப்படை ஊதியம் மற்றும் இதரப் படிகள் ஆகியவை பெறத் தகுதியுடையவராவார்.
- நியமனம் பெற்றுள்ள நபர் பணியில் சேரும் போது உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல் நலத் தகுதி சான்றினைப் பெற்று பணியில் சேரத் தகுதியுடையவராகிறார்.
- கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றுள்ள நபரால் பணிவாய்ப்புக்காக முன்னிலைப்படுத்தப்பட்ட கல்விச்சான்று மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவை உண்மையானவை அல்ல என்றோ அல்லது மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னாளில் கண்டறியப்பட்டால் இந்நியமனமானது எவ்விதமான முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

(த.பி.பா)

- தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
- நியமனம் பெற்றுள்ள நபர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை ஒரு பாடமாக பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழி இரண்டாம் நிலை மொழித் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
- பணிநியமன ஆணையின்படி அன்னார் பணியில் சேர்ந்ததற்கான பணியேற்பு அறிக்கையினை உடன் அனுப்பி வைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் / அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் நபர்களின் பணியினை விதிகளின்படி, ஓராண்டிற்குள் பணிவரன்முறை செய்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் / வட்டாரக் கல்வி / மாவட்டக் கல்வி / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது-

12.10.22

முதன்மைக் கல்வி அலுவலர்

தருமபுரி

12/10/22

பெறுநர்-

சம்மந்தப்பட்ட பணி நாடுநர்

நகல்-

1. சம்மந்தப்பட்ட அலுவலர் / பள்ளித் தலைமையாசிரியர்
2. மாவட்டக் கல்வி அலுவலர் தருமபுரி
3. சார்ந்த சார்நிலைக் கருவூல அலுவலகம்
4. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.